FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301621

1. District : மாவட்டம் Thanjavur | PS: காவல்நிலையம் V and AC | Year: ஆண்டு 2026 | FIR No.: மு.த.அ. எண் 07/2026 | Date: நாள் 28.07.2026

2. (i) Act சட்டம்: The PC Act 1988 (as amended in 2018) | Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் July-2026 | Date to : நாள் வரை at 1st week at about 11.00 hrs
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 22.07.2026 | Time to : நேரம் வரை at about 12.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.07.2026 | Time : நேரம் 07.00 am, Registered at 08.30 am
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.07.2026 | Time : நேரம் 07.00 am,

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் RDO office, Kumbakonam. Average 50 km North East
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tmt.M.Kavitha | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் M.Mahalingam
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1971 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Housewife | (g) Address : முகவரி 2/39 Pinnaimarathu Pillayar Koil Road, Kela Kabisthalam Post, Papanasam Taluk, Thanjavur District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr.Saravanan, Deputy Tahsildar/Head Clerk, RDO office, Kumbakonam,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

Delayed by the complainant

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) Not arise

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன்:-

தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் இன்று 28.07.2026 ஆம் தேதி காலை 07.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது தஞ்சாவூர் மாவட்டம். பாபநாசம் தாலுக்கா, கீழ கபிஸ்தலம், (அஞ்சல்) பின்னைமரத்து பிள்ளையார் கோவில் ரோடு கதவு எண் 2/39 என்ற முகவரியை சேர்ந்த மகாலிங்கம் மனைவி திருமதி M. கவிதா வயது 54/2026 என்பவர் என்முன்பாக ஆஜராகி விபரம் சொல்லி கொடுத்த கணிணியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரை பெற்று அதை படித்து பார்த்து அவரிடம் விபரம் கேட்டு தெரிந்து கொண்டு உடனே அந்த புகார் மனு தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில் எதிரி மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும் வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும் வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும் சென்னை மத்திய மண்டல ஊழல் தடுப்பு

/தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. கவிதா, 28/7/2026.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

28/7/2026

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(M.SARAVANAN)
Inspector of Police,
V & AC Unit,
Thanjavur Detachment.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பிய நாளும், நேரமும் On 28.07.2026

Name: பெயர் .....
Rank: நிலை .....

தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Cr.No. 07/2026 U/s 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:–

மற்றும் கண்காணிப்பு துறை காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்து விட்டு இன்று 28.07.2026 ஆம் தேதி காலை 08.30 மணிக்கு காலம் 7–இல் கண்ட குற்ற அலுவலர் மீது தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 07/2026 U/s 7 of the prevention of Corruption Act 1988 as amended in 2018 இன் படி வழக்குப்பதிவு செய்தேன். வாதி திருமதி M. கவிதா அவர்களது புகார் விபரம் பின்வருமாறு:– அனுப்புநர்:– M. கவிதா, க/பெ. R. மகாலிங்கம், 2/39, பின்னைமரத்து பிள்ளையார் கோவில் ரோடு, கீழ கபிஸ்தலம், (அஞ்சல்) பாபநாசம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம். பெறுநர்:–காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, தஞ்சாவூர். ஐயா, நான் தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தாலுக்கா, கீழ கபிஸ்தலம், பின்னைமரத்து பிள்ளையார் கோவில் ரோடு என்ற முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனது கணவர் மகாலிங்கம் அவர்கள் வாடகை கார் ஓட்டுனராக வேலை பார்த்து வருகிறார். எனக்கு இரண்டு மகள் மற்றும் ஒரு மகன் உள்ளனர். சுமார் 30 வருடங்களாக எங்களது குடும்ப அனுபவத்தில் இருந்த கபிஸ்தலம், இராமானுஜபுரம் கிராம புல எண்.46/2B ல் சுமார் 32 சென்ட் நஞ்சை நிலத்தினை உபரி நிலம் ஒப்படைப்பு மூலம் எனது பெயருக்கு கடந்த 2005 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. அன்றைய நாள் முதல் அந்த நிலத்தில் விவசாயம் செய்து, அரசுக்கு செலுத்த வேண்டிய குத்தகை தொகை செலுத்தி வருகிறேன். அந்த நிலத்திற்கான அசல் மற்றும் வட்டி தொகை முழுவதும் செலுத்திய பிறகு, கடந்த 28.08.2024 ஆம் தேதி கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியரிடமிருந்து தீர்வு சான்று பெற்றுள்ளேன். அதன் பிறகு நான் தனிபட்டா பெறுவதற்கு கடந்த ஜூலை மாதம் முதல் வாரத்தில் ஒரு நாள் சுமார் 11.00 மணிக்கு கும்பகோணம் கோட்டாட்சியரை பார்ப்பதற்காக அவரது அலுவலகத்திற்கு எனது கணவர் சென்று பார்த்தார். அப்போது அங்கு பணியில் இருந்த ஹெட் கிளார்க் என்றழைக்கப்படும் துணை வட்டாட்சியர் சரவணன் என்பவர் எங்களது

ஆவணங்களை பார்த்து விட்டு, உபரி நில பட்டா வழங்குவதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன், பொதுவாக RDO ஒரு லட்சத்திலிருந்து மூன்று லட்சம் வரை வாங்குகிறார். அதற்கு எனது கணவர், என்னிடம் அவ்வளவு வசதி கிடையாது, நான் கூலிக்கு கார் ஓட்டுகிறேன், எனக்கு ஹார்ட் ஆப்ரேசன் பன்னியிருக்கு, அதனால என்னால அவ்வளவு பணம் ரெடி பண்ணமுடியாது என்று சொல்லியுள்ளார். அதற்கு அவர் ஐம்பதாயிரமாவது கொடுத்திங்கனாதான் பட்டா ஏற்பாடு செய்ய முடியும் என்று சொல்லிவிட்டார். இந்த விபரத்தினை எனது கணவர் என்னிடம் வந்து சொன்னார். பிறகு நாங்கள் கொஞ்சம் ஆற போட்டு போய் கேட்கலாம் என்று மீண்டும் கடந்த 21.07.2026 ஆம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு கும்பகோணம் RDO அலுவலகத்திற்கு சென்று RDO-வை பார்ப்பதற்காக எனது கணவருடன் சென்றேன். அப்போது அவ்வலுவலகத்தில் பணியில் இருந்த பூமா என்ற பெண் ஊழியர் எங்களை விசாரித்து விட்டு, இதுசம்மந்தமாக நீங்கள் சரவணன் சாரை தான் பார்க்கவேண்டும், அவர் தான் இந்த பைலை வைத்திருக்கிறார், அவர் தற்போது இங்கு இல்லை வெளியில் சென்றுள்ளார், அதனால் நீங்க எனது செல் நம்பரை வைத்து கொள்ளுங்கள், நாளைக்கு போன் பன்னிட்டு வாங்க என்று சொன்னார், பின்னர் மறுநாள் 22.07.2026 ஆம் தேதி காலை சுமார் 10.20 மணிக்கு எனது கணவர் செல்போனிலிருந்து பூமா அவர்களது செல்போனுக்கு போன் செய்து, சரவணன் சார் இருக்கிறாரா என கேட்டேன். அதற்கு பூமா தான் ஆபிஸ், போயிட்டு போன் செய்கிறேன் என்று சொல்லிவிட்டு வைத்துவிட்டார். பின்னர் சுமார் 11.00 மணியளவில் பூமா அவர்களுக்கு கால் செய்து கேட்டப்போது, சரவணன் சார் வந்துட்டாங்க, வாங்க என்று சொன்னார். அதன் பிறகு நானும் எனது கணவரும் 22.07.2026 சுமார் 12.00 மணியளவில் கும்பகோணம் RDO ஆபிஸுக்கு சென்று, சரவணன் சாரை பார்த்து, பட்டா பற்றி விபரம் கேட்டேன். அதற்கு அவர், நான் ஏற்கனவே சொன்ன பணத்தை கொண்டுவந்திருங்கீங்களா என்று கேட்டார். அதற்கு நான், ஐம்பதாபிரம் என்பது எனக்கு ரொம்ப அதிகமாக இருக்கு சார், அவ்வளவு பணத்த என்னால் ரெடி பண்ண முடியல என்று சொன்னேன். அதற்கு சரவணன் சார், இதுக்கு மேல் என்னால் எதுவும் பண்ண முடியாது, ரூபாய் முப்பதாயிரம் பணம் கொடுத்தா மட்டுமே வேலைய முடிக்க முடியும், என்று கறாராக சொல்லி நீங்க கொடுக்கற பணத்த நான் RDO-க்குதான் கொடுக்கனும், வேறெம்மா, RDO-விடமே நானே அழைச்சிட்டு போறேன், நீங்களே பணத்த கொடுங்க,

இல்லனா பட்டா வாங்க முடியாது. ஏதாவது எழுதி வைச்சிடுவாரு பார்த்துக்குங்க என்று சொன்னார். நான் அவ்வளவு பணமில்லை என்று சொன்னேன். அதற்கு சரவணன் சார் ரூபாய் முப்பதாயிரம் பணத்தோடு செவ்வாய்கிழமை வாங்க என்று மீண்டும் கறாராக சொன்னார். எனக்கு வேற வழி தெரியாம சரி சார் என்று சொல்லிவிட்டு, நானும் எனது கணவரும் வந்துவிட்டோம். எனக்கும் எனது கணவருக்கும் கும்பகோணம் RDO அலுவலகத்தில் பணிபுரிகிற ஹெட் கிளார்க் திரு.சரவணன் அவர்கள் கேட்ட லஞ்சப்பணத்தை கொடுக்க விருப்பமில்லை. எனது கணவர் ஹார்ட் ஆப்ரேசன் செய்து ஆஞ்சியோ நோயாளியாக இருந்து வருவதால் என்னால் உடனடியாக புகார் கொடுக்கமுடியவில்லை. எனவே இன்று என் கணவருடன் வந்து இந்த புகார் மனுவுடன் பாபநாசம் வட்டாட்சியரது ந.க.6770/2024/ஆ2 நாள் .02.2026 அறிக்கை நகல், கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியரது தீர்வு சான்று நகலையும் இணைத்து கொடுத்து எனக்கு உபரி நில பட்டா வழங்குவதற்கு என்னிடம் ரூ.30,000/- லஞ்சம் கேட்ட ஹெட் கிளார்க் திரு.சரவணன் சார் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்). M. கவிதா தேதி.28.07.2026 Sir, Received the complaint on 28.07.2026 at 07.00 am. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to the SP/CR, V&AC, Chennai and registered a case in Thanjavur V&AC Cr.No.07/2026 u/s 7 of the P.C Act 1988 as amended in 2018 on 28.07.2026 at 08.30 am and took up for investigation. (Sd) M.Saravanan, Inspector of Police, Vigilance and Anti-Corruption, Thanjavur Detachment. The original FIR along with original complaint is submitted to the court of the Hon'ble Principal District and Sessions Judge, Thanjavur and copies submitted to the concerned officers.

Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Thanjavur Detachment.
28.07.2026